# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

**Case No. CC.No. 89 of 2026**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தமிழரசன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.04.06.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது கல்லக்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போதும் இலால்குடி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 15.11.2024 ம் தேதி அன்று இலால்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளருடன் நானும், காவலர் 1366 பிரபாகரன் என்பவரும் ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி, மணக்கால் ஆகிய இடங்களில் கண்காணித்த போது அண்ணாநகர் எதிரியின் வீட்டின் பின்புறம் சென்று மாலை 14.30 மணிக்கு சுகுணா க/பெ. ரமேஷ், அண்ணா நகர், இலால்குடி என்பவர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை உதவி ஆய்வாளருடன் நாங்கள் பிடித்து விசாரித்த போது, அரசு மதுபான பாட்டில்களை விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனைக்கு வைத்திருப்பதாக சொன்னார். பின்னர் எதிரி மறைத்து வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்கள் 180ml மானிட்டர் 5 பாட்டில்கள் எடுத்து ஆஜர்

செய்தார். பின்பு எதிரி 14.35 மணிக்கு குற்ற காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் எதிரி சுகுணா வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்களை பொது மக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் மகஜரில் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் 14.45 மணிக்கு கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், 1366 பிரபாகரன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு எதிரியுடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண். 503/2024 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்தார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்து 15.30 மணிக்கு கொட்டி அழித்தார். அதில் நானும் 1366 பிரபாகரன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.,சா.ஆ.1/அ.சா.1** ஆகும். கைப்பற்றுதல் மகஜர் **அ.,சா.ஆ.2/அ.சா.1** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.,சா.ஆ.3/அ.சா.1** ஆகும். அழித்தல் மகஜர் **அ.,சா.ஆ.4/அ.சா.1** ஆகும். உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**</u>

நான் ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன். 3 பேரும் தனித்தனி வாகனத்தில் சென்றோமா என்றால் இல்லை. நானும், பிரபாகரனும் ஒரு வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளர் அவருடைய இருசக்கர

வாகனத்தில் வந்தார். நாங்கள் தகவல் கிடைத்த பின்னர் ரோந்து பணிக்கு சென்றோமா அல்லது வழக்கமாக ரோந்து பணிக்கு செல்வது போல் சென்றோமா என்றால் வழக்கமான ரோந்து பணிக்கு சென்றோம். எதிரியை நிலையத்திற்கு அழைத்து வந்த பின்னர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் அரசு மதுபான பாட்டில்கள் தான் என்றால் சரிதான். அந்த மதுபான பாட்டில்கள் எந்த மதுபான கடையிலிருந்து வாங்கப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எதிரியை கைது செய்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வந்துவிட்டு மீண்டும் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர் தான் குற்ற எண், வழக்கின் சட்டப்பிரிவு ஆகிய விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர், அழித்தல் மகஜரில் குற்ற எண் எவ்வாறு குறிப்பிடப்பட்டது என்றால் அந்த விவரங்கள் உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். கைப்பற்றுதல் மகஜர் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 14.45 மணிக்கு தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 15 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னரே அழித்தல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலையமும், சம்பவ இடமும் ஒரே வீதியில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், இந்த வழக்கு

புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.04 17:05:24 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 89 of 2026**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிரபாகரன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.04.06.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது சமயபுரம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போதும் இலால்குடி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 15.11.2024 ம் தேதி அன்று இலால்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளருடன் நானும், தமிழரசன் என்பவரும் ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி, மணக்கால் ஆகிய இடங்களில் கண்காணித்த போது அண்ணாநகர் எதிரியின் வீட்டின் பின்புறம் சென்று மாலை 14.30 மணிக்கு சுகுணா க/பெ. ரமேஷ், அண்ணா நகர், இலால்குடி என்பவர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை உதவி ஆய்வாளருடன் நாங்கள் பிடித்து விசாரித்த போது, அரசு மதுபான பாட்டில்களை விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனைக்கு வைத்திருப்பதாக சொன்னார். பின்னர் எதிரி மறைத்து வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்கள் 180ml மானிட்டர் 5 பாட்டில்கள் எடுத்து ஆஜர் செய்தார். பின்பு எதிரி 14.35

மணிக்கு குற்ற காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் எதிரி சுகுணா வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்களை பொது மக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் மகஜரில் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் 14.45 மணிக்கு கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், தமிழரசன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு எதிரியுடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண். 503/2024 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்தார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்து 15.30 மணிக்கு கொட்டி அழித்தார். அதில் நானும், தமிழரசன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.,சா.ஆ.5/அ.சா.2** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.,சா.ஆ.6/அ.சா.2** ஆகும். உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நாங்கள் ரோந்து பணிக்கு மதுபான பாட்டில்கள் விற்பனை செய்யப்படுவதாக தகவல் கிடைத்த பின்னர் சென்றோமா அல்லது வழக்கம் போல் ரோந்து பணிக்கு சென்றோமா என்றால் வழக்கமான ரோந்து பணிக்கு சென்றோம். எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்த பின்னர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு

அழைத்து வரும் போது நாங்கள் மூவரும் உடன் வந்தோம் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும் போது பெண் காவலர்கள் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் அரசு மதுபான பாட்ல்கள் என்றால் சரிதான். எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரியை கைது செய்த பிறகு ரோந்து பணியை தொடர்ந்தோமா அல்லது காவல் நிலையத்திற்கு வந்தோமா என்றால் காவல் நிலையத்திற்கு வந்தோம். வழக்கு குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையம் வந்த பிறகு சம்பவ இடத்திற்கு மறுபடியும் சென்றோமா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், இந்த வழக்கு புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.04 17:05:34 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 89 of 2026**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பார்வதி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.04.06.2026**

**முதல் விசாரணை**

நான் இலால்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் சேகர் என்பவருடைய கையொப்பம் நன்கு பரிட்சயம் பெற்றதால் ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.11.2024ம் தேதி அன்று இலால்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சேகர், காவல் நிலைய காவலர்கள் முதல் நிலை காவலர் 651 தமிழரசன் மற்றும் காவலர் 1366 பிரபாகரன் ஆகியோர் ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி, மணக்கால், ஆதிகுடி ஆகிய இடங்களில் கண்காணித்த போது அண்ணாநகர் எதிரியின் வீட்டின் பின்புறம் சென்று மாலை 14.30 மணிக்கு சுகுணா க/பெ. ரமேஷ், அண்ணா நகர், இலால்குடி என்பவர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை உதவி ஆய்வாளருடன் நாங்கள் பிடித்து விசாரித்த போது, அரசு மதுபான பாட்டில்களை விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனைக்கு

வைத்திருப்பதாக சொன்னார். பின்னர் எதிரி மறைத்து வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்கள் 180ml மானிட்டர் 5 பாட்டில்கள் எடுத்து ஆஜர் செய்தார். பின்பு எதிரி 14.35 மணிக்கு குற்ற காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் எதிரி சுகுணா வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்களை பொது மக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் மகஜரில் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் 14.45 மணிக்கு கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் முதல் நிலை காவலர் 651 தமிழரசன் மற்றும் காவலர் 1366 பிரபாகரன் ஆகியோரிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். பின்பு எதிரியுடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண். 503/2024 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்தார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.,சா.ஆ.7/அ.சா.3** ஆகும். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை உதவி ஆய்வாளர் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்து 15.30 மணிக்கு கொட்டி அழித்தார். மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பட்டியல் சாட்சிகள் 1, 2 ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது 4(1)(C) TNP (Amendment) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்களை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை

என்றால் சரிதான். இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றவாறு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.04 17:05:41 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி